[1981 ஜனவரி 27

சங்கு குளிப்போருக்கு ஊக்குவிப்புத் தொகை.

*வினா எண். 43—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை திட்டத்தில் மாறுதல் செய்யப்பட்டு உள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1,500 முழு அளவு உள்ள சங்குகளுக்கு மேல் எடுக்கும் ஒவ்வொரு முழு அளவு சங்குக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக 60 காசுகள் ஊக்குவிப்புத் தொகை 1979–80 சங்கு குளி பருவத்திலிருந்து வழங்க ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தினால் எல்லா தொழிலாளர்களும் பயனடையமாட்டார்கள் என அறிந்து மாற்று திட்டம் ஒன்று 1980 நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. அதன்படி சங்கு குளித் தொழிலாளர் ஒவ்வொருவரும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் கீழ்க்கண்டவாறு ஊக்குவிப்புத் தொகை பெறுவர்:—

(i) 750 முழு அளவுள்ள சங்குகளுக்கு—ஒவ்வொரு சங்குக்கும் 10 காசுகள்.

(ii) 750 முழு அளவுள்ள சங்குகளுக்கு மேல் ஆனால் 1,500 சங்குகள் வரை—ஒவ்வொரு சங்குக்கும் 15 காசுகள்.

(iii) 1,500 முழு அளவுள்ள சங்குகளுக்கு மேல்—ஒவ்வொரு சங்குக்கும் 20 காசுகள். ஊக்குவிப்புத் தொகை 1978–79 சங்கு குளி பருவத்திலிருந்தே அளிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஊக்குவிப்புத் தொகை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நன்றி. அதோடு இதுவும் கூட போதாது என்று சொல்லி கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா? அதை அரசு பரிசீலித்ததா? அதுபோக வலம்புரிச் சங்கு எடுப்பதற்கு தனியாக ஏதேனும் ஊக்கத் தொகை கொடுக்கப்படுகின்றதா? சமீபத்தில் இது போன்ற வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா? அதற்கு எத்தனை தொகை அரசு வழங்கியிருக்கிறது?

1981 ஜனவரி 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நவம்பரில்தான் இந்த ஆணை இடப் பட்டிருக்கிறது. இதிலே எதுவும் குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கனவே 500 சங்கு, 600 சங்கு திரட்டு கிறவர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையும் இல்லாமல் இருந்த காரணத்தினால், 750 வரையில் ஒவ்வொரு சங்குக்கும் 10 காசு களும், 750 க்கு மேல் 1,500 வரையிலும் 15 காசுகளும், அதற்கு மேல் 20 காசுகளும் கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதை இப்போது வாங்கிக் கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இதிலே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமானால், இது வரையில் அது பற்றிய கோரிக்கைகள் வரவில்லை, அது பற்றி அரசின் பரிசீலனைக்கு வந்தால் அது பற்றி ஆராய அரசு தயாராக இருக்கின்றது. மற்றைய வலம்புரிச் சங்கைப் பொறுத்த வரையிலும் போதிய அளவுக்குக் குறிப்புகள் இல்லை. அதற்காகத் தனியான ஊக்கத் தொகை தரப்படுகிறது. தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மூழ்கி சங்கு குளிப்பது என்பது மிகவும் சிரமமான விஷயம் என்பது தாங்கள் அறிந்ததே. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நடித்த படகோட்டி படத்தில் கூட விவரமாக இதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சங்கு குளிப்பவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் விபத்துக் குள்ளானால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்குச் சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றிய செயற் குறிப்பு இப்போது இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கை அரசிடம் மட்டும்தான் விற்க வேண்டும் என்று சட்டம் இருப்பதால் கள்ளச் சந்தை சங்குத் தொழிலில் வளர்ந்து வரு வதை அரசு அறியுமா ? நல்ல சங்கை தனியாரிடம் விற்று விட்டு, அரசாங்கத்திடம் பாழ்பட்ட சங்குகளை மட்டுமே விற்க தொழிலாளிகள் கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே அரசிடம் மட்டும்தான் விற்க வேண்டும் என்ற சட்டத்தை மறு பரிசீலனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற குறை பாடுகள் எந்த அளவிலே நிகழ்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே அரசாங்கம் பெறுகின்றதிலே இந்த

நிலை ஏற்படுமானால் அரசாங்கம் வாங்காமல் யார் வேண்டு மானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்வோமேயானால் இதை விட அதிகம்தான் ஏற்பட முடியும். ஆகவே இதை ஆராய்ந்து பார்த்து ஒரு நியாயமான அளவுக்கு அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு என்ன வழிகாண முடியுமோ அதைக் காண அரசு ஏற்பாடு செய்யும்.

குமரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம்.

*வினா எண். 44—திரு. டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கவும், பாய் பின்னுவதற்கும், இரண்டு நூல் இழைகளிலான முறுக்கு நார்கள் தயார் செய்வதற்குமான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) எத்தனை பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன ?

(இ) எந்த எந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஈ) அந்த பயிற்சி நிலையங்களில் கயிறு டெக்னாலஜி பயிற்சி பெற்றவர்கள்தான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ, இ, & ஈ) மற்ற வினாக்களுக்கு இடமில்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் கயிறு பயிற்சி நிலையங்களில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் ? அவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது ? அந்த உதவித் தொகை அதிகரிக்கப்படுமா ? அந்தக் கயிறு பயிற்சி நிலையங்களில் டெக்னாலஜி படிக்காதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற பயிற்சி முறை சரியாக இல்லை. அதனால் அங்கே உற்பத்தி செய்யப்படும் கயிறுகளுக்கு சரியான மார்க் கெட்டு இல்லை என்பது தெரியுமா ? அங்கே டெக்னாலஜி படித்தவர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?